RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 153 | ஜூன்.8, 2025 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## ‘பதவி கிடைக்காததால் உதயநிதி ஸ்டாலின் அதிருப்தி’ ஆர்.பி.உதயகுமார் பேச்சு



சென்னை: ஜூன்.8-

மன்னராட்சிக்கு மகுடம் சூட்டும் நிலை தான் தமிழகத்தில் உள்ளது என்றும், பதவி கிடைக்காததால் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அதிருப்தியில் இருப்பதாகவும் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணை தலைவர் ஆர்.பி உதயகுமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள காணொலியில், “மதுரை பொதுக்குழுவில் வரலாற்றுச் சிறப்புமிக்க திமுகவின் தீர்மானம் என்ன?. மன்னராட்சிக்கு வழிவகுக்க உதயநிதி ஸ்டாலினுக்கு திமுக துணை நிற்கும் என்று தீர்மானம் போட்டார்கள்.

ஆனால், அந்த தீர்மானத்தில் திருப்தியடையாத உதயநிதி ஸ்டாலின், ‘திமுகவின் தீர்மானம் எந்த லட்சணத்தில் நிறைவேறும்‘ என்று எனக்கு தெரியும். எனக்கு அது முக்கியமில்லை. எனக்கு பதவி தான் உடனடியாக வேண்டும் என்று அழுத்தம் கொடுத்தாக பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகி உள்ளது. ஆகவே, மன்னராட்சிக்கு மகுடம் சூட்டும் நிலை தான் தமிழ்நாட்டில் உள்ளது. தமிழ்நாட்டின் ஜனநாயகத்தை பேராபத்து சூழ்ந்துள்ளது. இதை தமிழகத்துக்கு உரக்க சொல்வோம்.

இதை மடைமாற்றவே, தொகுதி மறுவரையறை குறித்து முதலமைச்சர் ஸ்டாலின் இல்லாத ஒன்றை பூதாகரம் ஆக்கி வருகிறார். ஈரை பேனாக்கி, பேனை பெருமாளாக்கி, பெருமாளை பெத்த பெருமாளாக்கி என கிராமத்தில் சொல்வார்கள். அதுபோல இல்லாத ஒன்றை இருப்பதாக, கானல் நீர் போல காட்சிப்படுத்த நினைக்கிறார்” என்று அந்த வீடியோ பதிவில் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, மதுரை பொதுக்குழுவில் திமுகவின் துணைப்பொதுச் செயலாளர் பதவி வழங்கப்படாததால் உதயநிதி ஸ்டாலின் அதிருப்தியில் இருப்பதாக அதிமுகவினர் சமூக வலைதளங்களில் விமர்சித்து வருகின்றனர்.

## ‘தமிழகத்தில் நிகழும் குற்றங்களை காவல்துறை கட்டுப்படுத்தவில்லை’ : ஜி.கே.வாசன் விமர்சனம்



திருப்பூர்: ஜூன்.8-

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவர் ஜி.கே.வாசன், பல்வேறு நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக திருப்பூர் வந்த நிலையில் நேற்று (ஜூன் 7) செய்தியாளர்களிடம் கூறியதாவது: சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில், பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான அமித் ஷா மதுரை வருவது கட்சியினருக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுப்பது மட்டுமல்ல அதிமுக உள்ளிட்ட ஒத்த கருத்துடைய கூட்டணி கட்சிகளுக்கு பலம் சேர்க்கும்.

தற்போது தமிழகத்தில் அதிமுக, பாஜக, பாமக மற்றும் ஒத்த கருத்துடைய கட்சிகள் வலுவான, பலமான கூட்டணியாக மக்களுடைய ஆதரவு பெற்ற கூட்டணியாக உள்ளது. எங்களது நோக்கம் ஆட்சி மாற்றம் தான். இந்த முக்கிய நோக்கத்துக்கு, தமிழகத்தில் உள்ள புதிய கட்சிகளாக இருந்தாலும், பழைய கட்சிகளாக இருந்தாலும் சரி இணைந்து பணியாற்ற வேண்டும் என்பது தமாகவின் விருப்பம்.

கல்வியில் தேர்ச்சி பெறும் மாணவ மாணவிகளை அரசியல் கட்சியின் தலைவர்கள், பொறுப்பாளர்கள் மாணவ மாணவிகளை ஊக்குவிப்பதற்காக பரிசு வழங்குவது வழக்கமான ஒன்றுதான். அப்படி இருக்கும்போது பெற்றோர்களே மாணவர்களை அழைத்துக்கொண்டு வரும் போது பெருமைப்படும்போது அதை வாழ்த்துவது நமது கடமையாக இருக்கிறது. அதைப்பற்றி விமர்சிப்தோ அரசியல் ஆக்குவதோ கூடாது.

ஐபிஎல் வெற்றி கொண்டாட்டத்தில் 11 பேர் உயிரிழந்திருப்பது, கர்நாடக காங்கிரஸ் ஆட்சியின் சரியான திட்டமிடல் இல்லாததை காட்டுகிறது. மேலும், போலீஸாரின் செயல் இழந்த பணிதான் காரணம். தமிழகத்தில் நடைபெறும் 4 ஆண்டுகால திமுக ஆட்சியில், சாதனை ஒன்றும் இல்லை, வேதனையான சாதனைகள் தான் உள்ளன. மக்களுக்கு கொடுத்துள்ள எந்த ஒரு வாக்குறுதியையும் திமுக அரசு நிறைவேற்றவில்லை. எங்கு பார்த்தாலும் ஆர்ப்பாட்டம், போராட்டம் நடைபெற்று வருகிறது.

4 ஆண்டு கால ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்ட நிலையிலே உள்ளன. சட்டம் ஒழுங்கை சரி செய்யாத அரசாக திமுக அரசு உள்ளது. இந்த அரசு தொடர்ந்து செயல்படுவது வெட்கக்கேடான செயல். கொலை, கொள்ளை, திருட்டு, பாலியல் வன்கொடுமை, போதைப்பொருள் புழக்கம் சமூகத்தில் அதிகரித்துள்ளது. எந்தவிதமான ஒரு கட்டுப்பாட்டையும் ஏற்படுத்த காவல்துறையால் முடியவில்லை. அரசின் செயல்பாடும் அதற்கு ஏற்றவாறு அமையவில்லை. வரும் 10 மாத காலங்களில் அவர்களால் இதை எந்த விதத்திலும் சரி செய்ய முடியாது என்ற அவநம்பிக்கைக்கு மக்கள் சென்றுள்ளனர். எதிர்ப்பு அலை அதிகரித்து வருகிறது.

திருப்பூர் மாநகராட்சியில் எங்கு பார்த்தாலும் குப்பைகள் தேங்கிக் கிடக்கின்றன. சாலை வசதி சரியில்லாமல், குண்டும் குழியுமாக காணப்படுகிறது. இதனால் தொழில் வளர்ச்சிக்கான சூழ்நிலை திருப்பூரில் இல்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.



■ மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் தனியார் பங்களிப்புடன் மாநகராட்சி பணியாளர்களுக்கு தலைக்கவசங்களை (ஹெல்மெட்) மாண்புமிகு மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் அவர்கள், மாநகராட்சி ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன், இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் வழங்கினார்கள். அருகில் மண்டலத் தலைவர் திருமதி.பாண்டிச்செல்வி அவர்கள், சுகாதாரக் குழுத் தலைவர் திரு.ஜெயராஜ் அவர்கள், நகர்நல அலுவலர் மரு.இந்திரா அவர்கள், உதவி நகர்நல அலுவலர் மரு.அபிஷேக் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

## தொகுதி மறுவரையறை தென்னகத்தின் குரலைக் காப்பாற்ற வேண்டிய தருணம் இது : முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!



சென்னை, ஜூன்.8-

2027 சென்சஸ் அடிப்படையில் தொகுதி மறுவரையறையை ஒன்றிய அரசு மேற்கொண்டால், தென்னகத்தின் ஜனநாயக வலிமை மதிப்பில்லாத அளவுக்குக் குறைந்துவிடும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவு வருமாறு:

மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் நிகழும் தாமதமும், அதைத் தொடர்ந்து நடைபெற இருக்கும் தொகுதி மறுவரையறையும் தற்செயலானவை அல்ல. நான் தொடக்கம் முதலே எச்சரித்து வரும் ஆபத்து நம் வாசற்படி வரை வந்தேவிட்டது.

ஒன்றிய பா.ஜ.க. அரசு சென்சஸ் மற்றும் தொகுதி மறுவரையறையைச் செயல்படுத்தவுள்ள போக்கு வஞ்சகம் நிறைந்தது. மக்கள்தொகைக் கட்டுப்பாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி வளர்ச்சியடைந்த தென்மாநிலங்கள் தண்டிக்கப்பட இருக்கின்றன.

அதே வேளையில், மக்கள்தொகைக் கட்டுப்பாட்டைப் பல பத்தாண்டுகளாகக் காற்றில் பறக்கவிட்ட மாநிலங்களோ நாடாளுமன்றத்தில் கூடுதல் இடங்களைப் பெற இருக்கின்றன. அநீதியான இந்த நடவடிக்கை கூட்டாட்சியின் சமநிலையைக் குலைத்து, பொறுப்பற்ற தன்மைக்கு வெகுமதி அளிக்கிறது.

இந்தச் சதித் திட்டம் குறித்து நான் முன்பே எச்சரித்திருந்தேன். தற்போது, ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப. சிதம்பரம் அவர்களும், பா.ஜ.க. எப்படி இந்தக் கைவரிசையைக் காட்டப் போகிறது என்பதை விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளார். நாம் விழிப்போடு இருப்பது மட்டுமல்ல, தென்னகத்தின் குரலைக் காப்பாற்றிக் கொள்வதற்கான வியூகங்களையும் தீட்டவேண்டிய வேண்டிய தருணம் இது.

1971ஆம் ஆண்டு சென்சஸ் தரவுகள் போய், 2027 மக்கள்தொகைக் கணக்கெடுப்பு தரவுகள்தான், அதற்கடுத்து உடனே நிகழும் தொகுதி மறுவரையறைக்கு, அடிப்படையாக அமையும். தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைத்து, தனக்குச் சாதகமான முறையில் நாடாளுமன்ற இடங்களை பா.ஜ.க. நிர்ணயித்துக் கொள்ளத்தான் இது வழி ஏற்படுத்தும்.

தொகுதி மறுவரையறையால் பாதிக்கப்படும் மாநிலங்களின் கவலைகள் கருத்தில் கொள்ளப்படும் என ஒன்றிய உள்துறை அமைச்சகம் சொல்கிறது. ஆனால் இவை தெளிவற்ற மழுப்பல் பதில்கள். இவர்கள் சொல்வதைத் தண்ணீரில்தான் எழுதிவைக்க வேண்டும். நாம் கேட்பதெல்லாம் நாடாளுமன்றத்தில் உறுதி அளியுங்கள், உரிய அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றுங்கள் என்பதே!

பிரிவு 370ஐ நீக்கிய பிறகு என்ன நடந்தது என்று பார்த்தாலே இவர்களது பேச்சின் இலட்சணம் புரிந்துவிடும். ஜம்மு காஷ்மீருக்கு மீண்டும் மாநில அந்தஸ்து வழங்கப்படும் என ஒன்றிய அரசு சொன்னது. தேர்தலும் நடைபெற்றது. உச்சநீதிமன்றத்திலேயே உறுதியளிக்கப்பட்டது. ஆனாலும், ஜம்மு காஷ்மீர் இன்னும் யூனியன் பிரதேசமாகத்தான் இருக்கிறது. இப்படிப்பட்ட சத்தியவான்களோடுதான் நாம் போராடிக் கொண்டிருக்கிறோம்.

2027 சென்சஸ் அடிப்படையில் தொகுதி மறுவரையறையை ஒன்றிய அரசு மேற்கொண்டால், தென்னகத்தின் ஜனநாயக வலிமை மதிப்பில்லாத அளவுக்குக் குறைந்துவிடும்.

அ.தி.மு.க. போன்ற அடிமைத் துரோகிகள் தங்களின் சுயநலத்துக்காக பா.ஜ.க. முன் மண்டியிட்டாலும், தி.மு.க.வின் தலைமையில் ஓரணியில் தமிழ்நாடு அணிவகுக்கும். நம் மாநிலம் வளர்ச்சியடைந்துள்ள ஒரே காரணத்துக்காகத் தண்டிக்கப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்! தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ‘அமித் ஷாவின் தமிழக வருகை முதல்வருக்கு பயத்தை ஏற்படுத்துகிறது’ : டிடிவி.தினகரன்



மதுரை: ஜூன்.8-

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தமிழகத்திற்கு வருவது முதல்வருக்கு பயத்தை ஏற்படுத்தி உள்ளது என்று அமமுக பொதுச்செயலாளர் டிடிவி.தினகரன் தெரிவித்துள்ளார்.

மதுரை புறநகர் மாவட்ட கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அமமுக செயல் வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் மதுரை ஆலந்தூர் பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. அக்கட்சியின் பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் 2026தேர்தல் குறித்து நிர்வாகிகளிடம் ஆலோசனை செய்யப்பட்டது.

அதன்பின் டிடிவி.தினகரன் செய்தியாளர்களிடம் பேசியதாவது: திமுகவை வீழ்த்த அனைவரும் ஒரணியில் திரண்டு வருகிறோம். ஊகங்களின் அடிப்படையிலேயே மத்திய அரசை முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றம்சாட்டி வருகிறார். திமுக ஆட்சிக்கு எதிராக மக்கள் கொதித்துப் போய் இருக்கிறார்கள். மதுரைக்கு வந்த முதல்வரால் இந்த நகருக்கு என்ன நடந்தது?’ இந்த ஆட்சியின் வண்டவாளம் தண்டவாளம் ஏறியது தான் மிச்சம். சாக்கடை கால்வாயை துணியை வைத்து மூடியது தான் மிச்சம்.

முதல்வரை வரவேற்க பிரியாணி கொடுத்து லாரியில் ஆட்களை ஏற்றி வந்ததைப் பார்த்தேன். கருணாநிதி காலத்திலேயே தொடர்ந்து 10 ஆண்டு காலம் திமுக ஆட்சிக்கு வர முடியாமல் தத்தளித்தது. பாஜகவை காரணம் காட்டி ஸ்டாலின் ஆட்சிக்கு வந்துள்ளார். சிறுபான்மை மக்கள் உட்பட அனைவரும் திமுகவின் ஆட்சியை புரிந்து கொண்டார்கள். 2026ம் ஆண்டில் நிச்சயமாக ஆட்சி மாற்றம் ஏற்படும்.

அமித்ஷாவின் தமிழக வருகை முதல்வருக்கு பயத்தை ஏற்படுத்துகிறது. எத்தனை முறை அமித்ஷா தமிழகத்திற்கு வந்தாலும் பாஜக கூட்டணி ஆட்சிக்கு வர முடியாது என முதல்வர் கூறுவது அவரது பயத்தின் வெளிப்பாடு. ஓ.பன்னீர்செல்வம் தேசிய ஜனநாயக கூட்டணியில் இருக்கிறார் என்பதை பாஜக தலைவர் பலமுறை உறுதி செய்துவிட்டார். அவருக்கு எல்லா முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டு வருகிறது. தேர்தல் நேரத்தில் அவருக்கான முக்கியத்துவம் தெரிய வரும்.

அரசியலில் எந்த ஒரு முயற்சிக்குமே முற்றுப்புள்ளி கிடையாது. அதிமுக என்பது ஜெயலலிதாவின் கட்சி. அவரின் தொண்டர்கள் எந்த கட்சியில் இருந்தாலும் ஓரணியில் சேர்ந்தால்தான் தீய சக்தி திமுகவை வீழ்த்த முடியும். எங்கள் கூட்டணியில் உறுதியாக பல கட்சிகள் வரும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## வடசென்னை வளர்ச்சி திட்டத்தில் காவல் துறையின் 7 வெவ்வேறு பணிகளுக்கு ரூ.54.36 கோடி




சென்னை: ஜூன்.8-

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் காவல்துறையினர் நலனுக்காக ரூ.54.36 கோடியை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் (சிஎம்டிஏ) ஒதுக்கியுள்ளது.

இதுகுறித்து சிஎம்டிஏ வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: சென்னை காவல்துறையின் வேண்டுகோளின்படி, சிஎம்டிஏவின் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்படி, உள்துறை ஒதுக்கீடு மூலம் சென்னை காவல்துறை மேம்பாட்டுக்காக தேவையான வசதிகள் வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, வடசென்னை பகுதியில் 45 இடங்களில் ஏஎன்பிஆர் கேமராக்கள் நிறுவ ரூ.9.16 கோடி, பொதுமக்கள் பாதுகாப்பை உறுதி செய்ய, காவல் ரோந்துப் பணிக்காக 60 புதிய இருசக்கர வாகனங்கள் வாங்க ரூ.90.6 லட்சமும், குடிசைவாழ் பகுதிகளில் இளைஞர்களின் கல்வித்திறன் மற்றும் விளையாட்டுத் திறன் மேம்பாட்டை உறுதிப்படுத்தும் 10 காவல் சிறார் மற்றும் சிறுமியர் மன்றங்கள் அமைக்க ரூ.60 லட்சமும், போதைப் பொருட்கள் நுகர்வால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை மற்றும் மறுவாழ்வுக்காக மறுவாழ்வு மையங்கள் அமைக்க ரூ.2.95 கோடியும் ஒதுக்கப்படுகிறது.

மேலும், பணி நிமித்தமாக வந்து செல்லும் காவல்துறையினர் தங்கி செல்வதற்காக காவலர் தங்கும் விடுதிகள் அமைக்க ரூ.9.75 கோடியும், கொளத்தூர் காவல் நிலையத்துக்கு புதிய கட்டிடம் கட்ட ரூ.16 கோடியும், பெரவள்ளூர் காவல் நிலையத்துக்கு புதிய கட்டிடம் கட்ட ரூ.15 கோடியும் என 7 காவல்துறை பயன்பாட்டுக்குரிய திட்டங்களுக்கு ரூ.54.36 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் காவல்துறையினருக்கு உதவியாக போக்குவரத்து, சட்டம் மற்றும் ஒழுங்கு பராமரித்தல், குற்றத்தடுப்புக்காக நவீன வசதிகள் மூலம் பொதுமக்கள், பெண்கள், குழந்தைகள், வணிக நிறுவனங்கள் பாதுகாப்பை உறுதி செய்யவும் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால், ஆயிரக்கணக்கான காவல்துறையினரும், பொதுமக்களும் பயன்பெறுவார்கள்.



## கலைஞரின் பிறந்த நாளை முன்னிட்டு காரணைப்புதுச்சேரி ஊராட்சியில் 948 குடும்பத்தினருக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்க மக்கள் மத்தியில் ஒப்புதல் தீர்மானம்

கூடுவாஞ்சேரி, ஜூன்.8:

செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊரப்பாக்கம் அடுத்த காரணைப்புதுச்சேரி ஊராட்சியில், காரணைப்புதுச்சேரி, காட்டூர், விநாயகபுரம், மயிலிமா நகர், கோகிலம் காலனி, கோகுலம் காலனி, கோகுலம் காலனி விரிவு பகுதி, பெரியார் நகர், அண்ணா நகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இந்நிலையில், கலைஞரின் 102வது பிறந்தநாள் விழா ஊராட்சிக்கு உட்பட்ட கோகுலம் காலனி விரிவு பகுதியில் நேற்று இரவு கொண்டாடப்பட்டது. இதில் ஊராட்சிமன்ற தலைவர் நளினிஜெகன் தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளர்களாக காட்டாங்கொளத்தூர் திமுக வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.டி.லோகநாதன், தெற்கு ஒன்றிய செயலாளர் ஆப்பூர் சந்தானம் ஆகியோர் கலந்துகொண்டு கலைஞரின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு 300 ஏழைகளுக்கு பிரியாணி அன்னதானம் வழங்கினர். பின்னர் ஊராட்சிக்கு உட்பட்ட கோகுலம் காலனி விரிவு பகுதியில் சர்வே எண் 387ல் 25 ஆண்டுகளுக்கு மேலாக வீடு கட்டி குடியிருந்து வரும் 948 குடும்பத்தினருக்கு இலவச வீட்டு மனை பட்டா மற்றும் மின் இணைப்பு வழங்க பொதுமக்கள் மத்தியில் ஒப்புதல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டன. இதில் திமுக நிர்வாகிகள், வார்டு உறுப்பினர்கள் உட்பட பொதுமக்கள் ஏராளமானோர் கலந்துகொண்டனர். முடிவில் ஊராட்சி செயலர் வரதராஜன் நன்றி கூறினார்.

# கட்டிக் குளம் கருப்பனேந்தல் மடம் சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமிகள் கோவிலில் தண்டாயுதபாணி கருங்கல் சன்னதி அமைக்க பூமி பூஜை நடைபெற்றது



மானாமதுரை ஜூன்.08

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ளது கட்டிக் குளம் இங்கு உள்ள கருப்பனேந்தேல் மடத்தில் மகாசித்தர் மாயாண்டி சுவாமிகள் முதல் ஜீவ ஒடுக்கம் ஆகும் இங்கு உள்ள தவசாலையில் ஒரு மண்டலம் தவம் இருந்து தன் சீடர்க்கு உள்ளங்கையில் காசி ராமேஸ்வரம் புன்னிய ஸ்தலத்தை தவசாலையில் இருந்த படியே காண்பித்த புண்ணிய இடமாக கருப்பனேந்தல் மடம் உள்ளது. இங்கு அவர் வாழ்ந்து பக்தர்களுக்கு பல்வேறு அற்புதங்கள் நிகழ்தியும் விநாயகர் தண்டாயுதபாணி மற்றும் பள்ளி கொண்ட பெருமாள் போன்ற தெய்வங்களை அவரே பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்து வந்த கட்டிக்குளம் சூட்டுக்கோல் தவத்திரு மாயாண்டி சுவாமிகளால் ஏற்படுத்தப்பட்ட கருப்பனேந்தல் மடத்தில் கடந்த ஆண்டு வைகாசி மாதம் (2024) வருடம் அருள்மிகு விநாயகர் கோவில் கருங்கல் திருப்பணிகள் மாயாண்டி சுவாமிகள் ஆசியுடன் நிறைவடையும் நிலையில் உள்ளது. தற்போது கருப்பனேந்தல் மடத்தில்



நேற்று தேதி புதன்கிழமை காலை 9.58 முதல் 10.34 குள் கட்டிக்குளம் மாயாண்டி சுவாமிகள் ஆசியுடன் மாயாண்டி சுவாமிகள் பிரதிஷ்டை செய்யப்பட்ட அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் கருங்கல் திருப்பணி அமைப்பதற்கு வாஸ்து செய்யும் பூஜை தொடங்கியது.

இதில் கருங்கல் திருப்பணி வேலைகள் தொடங்க பூர்வாங்க பூஜைகள் நடத்தப்பட்டு ஜேசிபி எந்திரம் மூலம் கருங்கல் கட்டுமான பணிகள் தொடங்கியது. முன்னதாக மகா சித்தர் சூட்டுக் மாயாண்டி சுவாமிகள் தவசாலையில் அபிஷேகம் சிறப்பு பூஜை மற்றும் தண்டாயுதபாணிக்கு

சிறப்பு பூஜைகள் நடைபெற்றது இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அன்னதானத்தின் பங்கேற்றனர்.

## தவெக தேமுதிக கூட்டணியா? ஜன.9 மாநாட்டில் அறிவிப்பு வெளியாகும் விஜய பிரபாகரன் தகவல்

கரூர்: ஜூன்.8-

தவெக தேமுதிக கூட்டணி அமைப்பது குறித்து கடலூரில் அடுத்த ஆண்டு ஜன. 9ம் தேதி நடைபெறும் மாநாட்டில் அறிவிக்கப்படும் என தேமுதிக இளைஞரணிச் செயலாளர் விஜய பிரபாகரன் தெரிவித்தார்.

கரூர் மாவட்டம் அரவக்குறிச்சியை அடுத்த ஆண்டிப்பட்டிக் கோட்டை பகுதியில் தேமுதிக நிர்வாகி இல்ல திருமண விழாவில் பங்கேற்ற



அவர், செய்தியாளர்களிடம் கூறியதாவது: தேமுதிக வளர்ச்சியை நோக்கிச் செல்வது மகிழ்ச்சியாக உள்ளது. தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை, தேமுதிகவை கூட்டணிக்கு அழைத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால், தற்போது தேமுதிகவின் வளர்ச்சி மட்டுமே எங்கள் நிலைப்பாடாக உள்ளது. தவெகதேமுதிக கூட்டணி அமையுமா என்பது குறித்து அடுத்த ஆண்டு ஜன. 9ம் தேதி கடலூர் மாவட்டத்தில் நடைபெறும் தேமுதிக மாநாட்டில், பொதுச் செயலாளர் பிரேமலதா அறிவிப்பார். இவ்வாறு அவர் கூறினார்.


## நீட் மறுதேர்வு நடத்த கோரிய மாணவர்களின் மனுக்கள் தள்ளுபடி: சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை: ஜூன்.8-

மின்சார துண்டிப்பு காரணமாக நீட் தேர்வை முழுமையாக எழுத முடியாததால் மறு தேர்வு நடத்த வேண்டும் என்று உத்தரவிட கோரி 16 மாணவர்கள் தாக்கல் செய்த வழக்கை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

இளநிலை மருத்துவ படிப்பில் மாணவர் சேர்க்கைக்கான நீட் தேர்வு நாடு முழுவதும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மையங்களில் கடந்த மே 4ம் தேதி நடைபெற்றது. 22 லட்சம் மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்.

இந்த நிலையில், ‘அன்றைய தினம் சென்னையில் கனமழை பெய்ததால், மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதனால், எங்களால் முறையாக தேர்வு எழுத முடியவில்லை’ என்று கூறி, ஆவடி கேந்திரிய வித்யாலயா பள்ளியில் தேர்வு எழுதிய 13 பேர், குன்றத்தூர் அரசு மேல்நிலை பள்ளியில்



தேர்வு எழுதிய 2 பேர், கே.கே.நகர் பத்ம சேஷாத்ரி பள்ளி மாணவர் ஒருவர் என 16 பேர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்குகளை விசாரித்த உயர் நீதிமன்றம், நீட் தேர்வு முடிவுகளை வெளியிட கூடாது என இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில், இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, தேசிய தேர்வு முகமை தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.

‘மின்சாரம் துண்டிக்கப்பட்டது குறித்து விசாரணை நடத்தியதில், மாணவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என தெரியவந்தது. பெரும்பாலான கேள்விகளுக்கு அவர்கள் பதில் அளித்துள்ளனர். எனவே, மறு தேர்வு நடத்த முடியாது’ என அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் நீதிபதி சி.குமரப்பன் நேற்று தீர்ப்பு வழங்கினார். ‘‘மத்திய அரசு நடத்திய விசாரணையில் எடுக்கப்பட்டுள்ள முடிவு நியாயமானது. 22 லட்சம் பேர் தேர்வு எழுதியுள்ள நிலையில், மறுதேர்வு நடத்த உத்தரவிட்டால், அது தீவிர தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, வழக்குகளை தள்ளுபடி செய்கிறேன்’’ என்று நீதிபதி தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.



■ மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் அவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டம், வையம்பட்டி ஊராட்சி ஒன்றியம், முகவனூர் (வடக்கு) ஊராட்சி, பாம்பாலம்மன் கோவில் திடல், பாம்பாட்டிபட்டி பகுதியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் முகாமில் கலந்து கொண்டு விழாப் பேருரையாற்றி, இம்முகாமில் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர் செல்வி ஜோதிமணி, மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர் திரு.ப.அப்துல்சமது அவர்கள், அரசு துறை அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# தட்கல் ரயில் டிக்கெட் முன்பதிவுக்கு ஆதார் கட்டாயம்: பயணத்தின்போது ஆதாரை பரிசோதிக்க உத்தரவு

சென்னை: ஜூன்.8-

ரயிலில் தட்கல் முறையில் டிக்கெட் முன்பதிவு செய்ய ஆதார் கட்டாயமாக்கப்படவுள்ள நிலையில், ரயில் பயணத்தின்போது, பயணிகள் அடையாள அட்டைக்கு ஆதாரை காண்பித்தால் அதை ஸ்கேன் செய்து பரிசோதிக்க ரயில்வே வாரியம் உத்தரவிட்டுள்ளது.

நீண்டதூர பயணத்துக்கு ரயில் போக்குவரத்தையே பொதுமக்கள் பெரிதும் விரும்புகின்றனர், இதனால் ரயில்களில் பயணிப்போர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ரயில் நிலைய டிக்கெட் கவுன்ட்டர்களில் டிக்கெட் முன்பதிவு செய்யப்படுகிறது. பயண தேதிக்கு ஒருநாள் முன்பாக தட்கல் முறையிலும் டிக்கெட் முன்பதிவு செய்யப்படுகிறது. இதுதவிர, ஐஆர்சிடிசி எனப்படும் இந்திய ரயில்வே உணவு மற்றும் சுற்றுலா கழக இணைதளத்திலும் டிக்கெட் முன்பதிவு செய்யலாம்.

இருப்பினும் ஆன்லைனில் தட்கல் முறையில் டிக்கெட் முன்பதிவு செய்வது கடும் பிரயத்தனமாக உள்ளது. முன்பதிவு ஆரம்பித்த சில நொடிகளிலேயே ‘கன்பார்ம்’ டிக்கெட் முடிந்து ‘வெயிட்டிங்’ லிஸ்ட்டுக்கு சென்று விடுகிறது. மேலும் தொழில்நுட்ப காரணங்களாலும் டிக்கெட் முன்பதிவு செய்வதில் தாமதம் ஏற்படுகிறது. எனவே இவற்றை ஆய்வு செய்து களைய உரிய நடவடிக்கை எடுக்கும்படி ரயில்வே துறைக்கு கோரிக்கைகள் தொடர்ந்து வைக்கப்பட்டன.

அதேபோல் டிக்கெட் கவுன்ட்டர்களில் காலை 10 மணிக்கு தட்கல் டிக்கெட் முன்பதிவு செய்வதற்கு பல




மணி நேரத்துக்கு முன்பாகவே காத்திருந்து வரிசையில் நின்றாலும் 90 சதவீத பேருக்கு டிக்கெட் கிடைப்பது இல்லை. இதுதொடர்பாகவும் ரயில்வே துறை அமைச்சகத்துக்கு தொடர்ந்து புகார்கள் அனுப்பப்பட்டு வந்தன.

அதைத்தொடர்ந்து தட்கல் டிக்கெட் மோசடி தொடர்பாக, 2.5 கோடி போலி கணக்குகளை அண்மையில் கண்டறிந்து ஐஆர்சிடிசி நீக்கியது.

இதற்கிடையே, தட்கல் டிக்கெட்களை மக்கள் எளிதாகப் பெறும் வகையில் விரைவில் ஆதார் அங்கீகார முறை தொடங்கப்பட உள்ளதாக ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்திருந்தார். இதன்மூலம், பயணிகள் எளிதாக தட்கல் பயணச்சீட்டுகளை முன்பதிவு செய்ய முடியும் என்றும், இந்தப்பணியை சிஆர்ஐஎஸ் மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இதைத்தொடர்ந்து, தட்கல் மூலமாக ரயில் டிக்கெட் முன்பதிவு செய்வதற்கு ஆதார் விரைவில் கட்டாயமாக்கப்பட உள்ளது. அதாவது, தட்கல் ரயில் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்யும்போது, ஆதார் எண் அத்துடன் இணைக்கப்பட வேண்டும். இதனை அடுத்து ஆதார் உடன் இணைக்கப்பட்ட தொலைபேசி எண்ணுக்கு ஓடிபி அனுப்பி வைக்கப்பட்டு சரிபார்ப்பு நடத்தப்பட்ட பிறகு பின்னர்தான் தட்கல் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்ய முடியும் என்ற வகையில் மாற்றம் கொண்டு வரப்பட உள்ளது.

தட்கல் டிக்கெட் முன்பதிவு நேரத்தில், ஆதார் எண் இணைக்கும் பயனருக்கு மற்ற பயனர்களைக் காட்டிலும் 10 நிமிடங்கள் முன்னுரிமை கொடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நேரத்தில் முகவர்களால் கூட தட்கல் டிக்கெட் எடுக்க முடியாது. இந்த புதிய நடைமுறை இம்மாத இறுதியில் அமலுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### ரயில்வே வாரியம் உத்தரவு

இதற்கிடையே, ரயிலில் பயணிக்க முன்பதிவு டிக்கெட்டை வேறு பெயரில் பதிவு செய்து, போலி ஆதார் அட்டைகளை தயார் செய்து தந்து, பயண ஏற்பாடுகளை ஏஜென்ட்கள் செய்வதாக ரயில்வே சந்தேகிக்கிறது. எனவே, ரயிலில் பயணம் செய்யும்போது, அடையாள அட்டையாக ஆதார் கொடுக்கும்பட்சத்தில், அதை ஸ்கேன் செய்து பரிசோதிக்க டிக்கெட் பரிசோதகர்களுக்கு ரயில்வே வாரியம் உத்தரவிட்டுள்ளது.

இதுதவிர, தூய்மை பணியாளர்கள் (ஒப்பந்த பணியாளர்கள்) போர்வையில் சீருடை அணிந்து டிக்கெட் இன்றி சிலர் பயணம் செய்வதாகவும் ரயில்வே சந்தேகிக்கிறது. இதனால், அவர்களின் ஆதார் அட்டைகளையும் பரிசோதிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

# மதுரை முருக பக்தர்கள் மாநாட்டை நடத்தவிடாமல் இடையூறு: நயினார் நாகேந்திரன் குற்றச்சாட்டு

மதுரை: ஜூன்.8-

மதுரையில் முருக பக்தர்கள் மாநாட்டை நடத்தவிடாமல் தடுக்க பல்வேறு இடையூறுகளை செய்கின்றனர். மாநாட்டுக்கு அனுமதி மறுத்தால் உயர் நீதிமன்றத்தை நாடுவோம் என்று பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் கூறினார்.

மதுரை ஒத்தக்கடை வேலம்மாள் மைதானத்தில் இன்று (ஜூன் 8) நடைபெறும் பாஜக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பங்கேற்கிறார். இந்த கூட்டத்துக்கான பந்தல்கால் நடும் விழா நேற்று நடைபெற்றது. இதில், பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், பொதுச் செயலாளர் ராம.சீனிவாசன், பெருங்கோட்டப் பொறுப்பாளர் கதலி நரசிங்கப் பெருமாள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். பின்னர், நயினார் நாகேந்திரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மதுரையில் நாளை நடைபெறும்



பாஜக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா இன்று இரவு மதுரை வருகிறார். இரவு மதுரையில் தங்கும் அவர் நாளை காலை மீனாட்சியம்மன் கோயிலுக்குச் செல்கிறார். மாலையில் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்கிறார்.

எம்ஜிஆர் மதுரையில்தான் முதல் கூட்டம் நடத்தினார். மதுரையில் எந்த நிகழ்ச்சி நடத்தினாலும் வெற்றி பெறும். இது மீனாட்சி ஆட்சி செய்யும் இடம். தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சிக்கு வர வேண்டும். அதனால்தான் மதுரையில் கூட்டம் நடத்தப்படுகிறது.

பாஜக ஆலோசனைக் கூட்டத்தில் கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்கவில்லை. பாஜக கூட்டணியில் ஓபிஎஸ் இருக்கிறார். பாமகவும் வரும். தேமுதிக வருகையை பொறுத்திருந்து பார்ப்போம்.

தமிழகத்தில் திமுக அரசுக்கு எதிராக அனைவரும் ஓரணியில் சேர வேண்டும் என்பதுதான் பாஜகவின் விருப்பம்.

பாமக விவகாரத்தில் குருமூர்த்தியை வைத்து பாஜக சமரசம் செய்யவில்லை. அவரது முயற்சிக்கும், பாஜகவுக்கும் சம்பந்தம் இல்லை. குருமூர்த்தி நாட்டில் நல்ல விஷயங்கள் நடைபெற வேண்டும் என்று விரும்புகிறார். அவர் மக்கள் நலனை விரும்புபவர். மதுரையில் முருக பக்தர்கள் மாநாட்டை நடத்தவிடாமல் தடுக்க பல்வேறு இடையூறுகளை செய்கின்றனர்.

மாநாட்டுக்கு அனுமதி மறுத்தால் உயர் நீதிமன்றத்தை நாடுவோம். டாஸ்மாக் நிறுவனத்தில் சோதனை நடத்த மத்திய அரசுக்கு அதிகாரம் உள்ளது. அந்த சோதனையில் பங்கேற்ற அமலாக்கத் துறை அதிகாரிகள் இடமாறுதல் செய்யப்பட்டது, வழக்கமான நடைமுறைதான். இவ்வாறு அவர் கூறினார்.

# வேலூர் மாவட்டத்தில் கடந்த மூன்றாண்டுகளில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 63,739 மாணவ மாணவியர்கள் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை பெற்று, 1,923 நபர்கள் வேலை வாய்ப்பினை பெற்றுள்ளனர்: மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா சுப்புலெட்சுமி தகவல்

நான் முதல்வன் திட்டத்தில் திறன் பயிற்சிகளை பெற்று வேலைவாய்ப்பினை பெற்றுள்ள மாணவ, மாணவிகள் வேலை வாய்ப்பினை பெற்றதன் மூலமாக தங்கள் மனம் நிறைந்துள்ளதாகவும், இத்திட்டத்தை கொண்டு வந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டில் இளைஞர்களின் வேலைவா ய்ப்புக்கென தொழில்துறையின் தேவை சார்ந்த திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்க நான் முதல்வன் எனும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் மூலம் கல்லூரி பாடத்திட்டத்தில் வழங்கப்படும் வழக்கமான பாடப்பிரிவுகளுடன் மாறிவரும் தொழில்நுட்ப உலகிற்கு ஏற்ப திறன் படிப்புகளும் இணைந்து வழங்கப்படுகிறது.

பல்வேறு படிப்புகள் பற்றிய அவ்வப்போதைய சமீபத்திய தகவல்களையும், தொழில் துறைகளுக்குத் தேவையான குறிப்பிட்ட திறன்கள் தொடர்பான தகவல்கள் குறித்தும், கல்லூரி மாணவர்கள் தெரிந்து கொள்ளும் வகையில் அனைத்து விவரங்களையும் வழங்குவதே நான் முதல்வன் தளத்தின் நோக்கமாகும். இது தமிழ்நாட்டில் உள்ள மாணவர்கள் தங்களுடைய வாழ்க்கை இலட்சியங்களை அடையும் வகையில், தங்களுக்கு விருப்பமான துறையில் பயிற்சி பெற உதவுகிறது

தொழில்துறையில் தற்போதுள்ள பணியிட இடைவெளிகளை நிரப்பக்கூடிய திறன் கொண்டவர்களாக மாணவர்களை உருவாக்கும் வகையில் பல்வேறு திறன் பயிற்சிகளை அவர்களுக்கு அளிப்பதற்கான ஆற்றல்மிகு பயிற்றுனர்களை அடையாளம் காண்பதும் இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

நான் முதல்வன் மாநிலம் முழுவதும் உள்ள 18 முதல் 35 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு பல்வேறு மாநிலம் மற்றும் மத்திய அரசின் உதவி திட்டங்களின் கீழ் இலவச வேலை வாய்ப்புடன் தொடர்புடைய திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்குகிறது. தேசிய அளவில் சான்றளிக்கப்பட்ட இந்த பயிற்சி வகுப்புகள் பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் சுகாதாரம், ஊடகம், பொழுதுபோக்கு, பசுமை சார்பணிக, சில்லறை வணிகம், அழகு கலை, கட்டுமானம், மின்னணுவியல், வன்பொருள், உணவு பதப்படுத்துதல், தோல். சரக்கு போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் போன்ற 20க்கும் மேற்பட்ட வெவ்வேறு துறைகளில் மாநிலம் முழுவதும் உள்ள நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் உள்ள மையங்களில் நடத்தப்படுகின்றன.

நான் முதல்வன் திட்டத்தின் வாயிலாக மாணவர்களுக்கு தொழில்துறை தொடர்பான, அதற்குத் தேவையான தொழில்நுட்ப திறன்கள், தனிப்பட்ட திறன்கள், நிறுவன திறன்கள் ஆகியவற்றில் திறன் பயிற்சிகள் கிடைக்கும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற கல்வித்துறை நிறுவனங்களுடன் இணைந்து ஆங்கில மொழித் திறன் வழங்கப்படும்.

நான் முதல்வன் திட்டம் தொடங்கப்பட்ட 2022 ஆம் ஆண்டு முதல் கடந்த மூன்று ஆண்டுகளில் (2022-23, 2023-24, 2024-25) வேலூர் மாவட்டத்தில் 4 பொறியியல் கல்லூரிகளில் 11,112 மாணாக்ர்களும், 8 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 42,788 மாணாக்கர்களும், 19 பல் தொழில்நுட்பக் கல்லூரிகளில் 9,839 மாணாக்கர்களும் என மொத்தம் 63,739 மாணாக்கர்களுக்கு பல்வேறு திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

பொறியியல் கல்லூரிகளில் நான் முதல்வன் திட்டத்தின் மூலமாக 2,388 இறுதி ஆண்டு மாணாக்கர்களுக்கு சீமென்ஸ், டசால்ட், மைக்ரோசாப்ட், ஐ.பி.எம், சிஸ்கோ, ஆட்டோ டெஸ்க் போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் மூலமாகவும், எல்.என்.டி, டி.சி.எஸ், இன்போசிஸ், என்.எஸ்.இ போன்ற புகழ்பெற்ற உள்நாட்டு நிறுவனங்கள் மூலமாகவும் திறன் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளது. இதன் மூலமாக வேலூர் மாவட்டத்தில் பொறியியல் படிப்புகளில் பயின்ற 867 மாணாக்கர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளது.

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் நான் முதல்வன் திட்டத்தின் மூலமாக 16,567 இறுதி ஆண்டு மாணாக்கர்களுக்கு முன்னணி நிறுவனங்களின் பயிற்றுநர் மற்றும் பாடங்களுடன் திறன் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளது. இதன் மூல மாக வேலூர் மாவட்டத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயின்ற 652 மாணாக் கர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளது.

மேலும் பல் தொழில்நுட்பக் கல்லூரிகளில் நான் முதல்வன் திட்டத்தின் மூலமாக 2,859 இறுதி ஆண்டு மாணாக்கர்களுக்கு முன்னணி நிறுவனங்களின் பயிற்றுநர் மற்றும் பாடங்களுடன் திறன் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளது. இதன் மூலமாக வேலூர் மாவட்டத்தில் பல் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயின்ற 404 மாணாக்கர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளது.

வேலூர் மாவட்டத்தில் கடந்த மூன்றாண்டுகளில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பொறியியல் கல்லூரிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பல் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயின்ற 63,739 மாணவ மாணவியர்கள் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை பெற்று பயனடைந்துள்ளனர். இவர்களில் இறுதி ஆண்டு பயிலும் 21,814 மாணக்கர்களில் 1,923 மாணாக்கர்கள் வேலை வாய்ப்பினை பெற்றுள்ளனர் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.இரா சுப்புலெட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

நான் முதல்வன் திட்டத்தில் திறன் பயிற்சிகளை பெற்று வேலைவாய் ப்பினை பெற்றுள்ள மாணவ, மாணவிகள் தெரிவித்ததாவது,

குடியாத்தம் திருமகள் ஆலை அரசு கல்லூரியில் BCA 3 ஆம் ஆண்டு படிக்கும் மாணவி லோஷனி தெரிவித்ததாவது.

என்னுடைய பெயர் லோஷனி. நான் காட்பாடியில் இருந்து வருகிறேன். காட்பாடி அருகில் உள்ள ஜங்காலப்பள்ளி அரசு பள்ளியில் பன்னிரண்டாம்



வகுப்பு வரை படித்தேன். நான் 12 ஆம் வகுப்பிற்கு பிறகு குடியாத்தம் திருமகள் ஆலை அரசு கல்லூரியில் BCA படித்து வருகிறேன். இப்பொழுது நான் இறுதி ஆண்டு படிக்கிறேன். ஒவ்வொரு தேர்விலும் நான் 90 சதவீதத்திற்கும் அதிகமான மதிப்பெண்களை பெற்று வருகிறேன். இந்த நிலையில் எனக்கு வேலைவாய்ப்பில் பயிற்சி அளிக்கக் கூடிய வகையில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் திறன் பயிற்சிகள் அளிக்கப்பட்டது. இந்த திட்டத்தின் மூலமாக எனக்கு Google Cloud, Python பயிற்சிகள் அளிக்கப்பட்டது. இந்த பயிற்சி முடித்த பிறகு எங்களுடைய கல்லூரியில் நான் முதல்வன் திட்டத்தின் மூலமாக வேலை வாய்ப்பிற்கான நேர்காணல் நடைபெற்றது. இந்த நேர்காணலில் நான் மூன்று முக்கியமான கம்பெனிகளில் தேர்வானேன். அதில் ஒன்று Zebronics, மற்றொன்று Festo, மூன்றாவதாக ஒரு AI தொழில்நுட்ப நிறுவனத்தில் தேர்வானேன்.

இந்தத் திறன் பயிற்சிகளில் திறமைகளை சிறப்பாக வெளிப்படுத்திய எங்கள் கல்லூரியில் இருந்து இரண்டு நபர்களை தேர்வு செய்து சென்னைக்கு பயிற்சிக்கு அனுப்பினார்கள். அதில் நானும் ஒருவர். இந்த பயிற்சிக்கு செல்ல வேண்டிய சூழ்நிலையில் எனக்கு செமஸ்டர் தேர்வுகள் இருந்ததால் பயிற்சியில் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலை இருந்தது. இதுகுறித்து நான் முதல்வன் திட்ட அலுவலர்களுடன் தெரிவித்த பொழுது, அதற்கும் அவர்களே எனக்கு ஒரு தீர்வை வழங்கினார்கள். இங்கிருந்தபடியே ஆன்லைன் மூலமாக வகுப்புகளில் பங்கேற்க வழிவகை செய்து கொடுத்தார்கள். இப்பொழுது அந்த வகுப்புகளிலும் நான் கலந்து கொண்டு சிறப்பாக என்னுடைய திறன்களை வளர்த்து வருகிறேன். இந்த பயிற்சி வகுப்புகளில் ஒரு மிடில் கிளாஸ் குடும்பமாக இருக்கும் ஒரு நபர் நல்ல வேலை வாய்ப்பு மூலமாக எவ்வாறு தன்னுடைய வாழ்க்கை முறையை ஹை கிளாஸ் குடும்ப வாழ்க்கை முறையாக மாற்றிக் கொள்வது என்பது குறித்து சிறப்பாக எடுத்துரைத்தார்கள். இந்த பயிற்சிகள் முடிந்த பிறகு செமஸ்டர் தேர்வுகள் முடிந்த பிறகு நான் ஏதேனும் ஒரு நல்ல நிறுவனத்தில் நல்ல சம்பளத்திற்கு வேலைக்கு சென்று விடுவேன்.

நான் முதல்வன் திட்த்தின் வாயிலாக திறன் பயிற்சி பெற்று வேலை வாய்ப்பினை பெற்றுள்ளதால் என்னுடைய மனம் நிறைந்துள்ளது. இத்திட்டத்தை கொண்டு வந்து அரசு கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு திறன் பயிற்சிகளை வழங்கி நல்லதொரு வேலைவாய்ப்பினை வழங்க ஏற்பாடு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

IIT சென்னையில் Btech (Naval architech & Ocean Engg) படிக்க தேர்வாகியுள்ள காட்பாடி பகுதியை சார்ந்த மாணவன் தினேஷ்குமார் தெரிவித்ததாவது.

என்னுடைய பெயர் தினேஷ்குமார். நான் காட்பாடி காங்கேயநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 10 ஆம் வகுப்பு படித்து வந்தேன். என்னுடைய தந்தையின் பெயர் பாபு. அவர் காட்பாடி ரயில் நிலையத்தில் மூட்டை தூக்கும்



தொழிலாளியாக பணியாற்றி வந்தார். 6 மாதத்திற்கு முன்பாக என்னுடைய தந்தைக்கு திடீரென Heart attack வந்து அவருக்கு open heart surgery செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது அவரால் வேலைக்கு செல்ல முடியவில்லை. என்னுடைய அம்மா பீடி சுற்றும் தொழில் செய்து என்னை படிக்க வைத்து வருகிறார்.

இந்த நிலையில் எனக்கு தமிழ்நாடு அரசின் வேலூர் மாவட்ட மாதிரி பள்ளியில் பயில்வதற்கு வாய்ப்பு கிடைத்தது. மாதிரி பள்ளிக்கு செல்வதற்கு முன்பாக எனக்கு JEE, IIT, NIT இதைப்பற்றி எதுவுமே தெரியாது. மாதிரி பள்ளியில் உயர்கல்வி படிப்பதற்கு நான் முதல்வன் திட்டத்தின்கீழ் சில வழிகாட்டிகள் வழங்கப்பட்டது. அப்பொழுதுதான் எனக்கு JEE mains exam பற்றி தெரிந்துகொண்டு ஜனவரி மற்றும் ஏப்ரல் மாதத்தில் எழுதி தேர்வானேன். பிறகு JEE Advance exam எழுதுவதற்காக என்னை தேர்வு செய்து சென்னை சைதாப்பேட்டையில் உள்ள அரசு மாதிரி பள்ளியில் 30 நாட்கள் தங்க வைத்து எனக்கு அங்கே பயிற்சி வழங்கப்பட்டது. JEE advance exam தேர்விலும் நான் வெற்றி பெற்று IIT சென்னையில் எனக்கு Btech Naval architech & Ocean Engg படிப்பதற்கு வாய்ப்பு கிடைத்தது.

10 ஆம் வகுப்பு பயிலும் வரை JEE, IIT இதைப்பற்றி எதுவுமே தெரியாமல் இருந்த எனக்கு இது குறித்து நான் முதல்வன் திட்டத்தில் தெரியப்படுத்தி, பயிற்சிகளையும் வழங்கி IIT ல் படிப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றால் அதற்கு முழுமுதற் காரணம் தமிழ்நாடு அரசு செயல்படுத்தியுள்ள நான் முதல்வன் திட்டம். இத்திட்டத்தின் மூலம் IIT சென்னையில் தேர்வாகியுள்ளதால் என்னுடைய பெற்றோர்கள் மற்றும் என்னுடைய மனமும் நிறைந்துள்ளது. இத்திட்டத்தை கொண்டுவந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பெற்றோரின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**செய்தி வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், வேலூர்.**



■ விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், ஆனையூரில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், 26.04.2025 நெடுங்குளம் கிராமத்தில் அன்று தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் என 10 நபர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.20 இலட்சம் மதிப்பில் காசோலைகளை நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் வீ.ப.ஜெயசீலன், சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம், சார் ஆட்சியர் ப்ரியா ரவிச்சந்திரன், மாநகராட்சி ஆணையர் சரவணன், துணை மேயர் விக்னேஷ் பிரியா, முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவர் விவேகன்ராஜ் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர். இந்த நிவாரண உதவி, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறுதலாகவும், அவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவியாகவும் அமையும் என நம்புகிறேன் என்று அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.



■ விருதுநகர் மாவட்டம் சிவகாசி வட்டம் ஆனையூரில் அமைந்துள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், தமிழ்நாடு அரசின் 50 சதவீத நிதியுடன், சிவகாசி லவ்லி ஆப்செட் மற்றும் அரசன் அலுமினியம் ஆகிய நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு நிதியுடன் ரூ. 80 லட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்ட உள்விளையாட்டு அரங்கம் மற்றும் பார்வையாளர் அமர்வுக் கூடத்தை மாணவர்களின் பயன்பாட்டிற்குத் நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கடந்த (06/06/25) திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் வீ.ப.ஜெயசீலன், சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம், சிவகாசி சார் ஆட்சியர் ப்ரியா ரவிச்சந்திரன்,சிவகாசி மாநகராட்சி ஆணையர் சரவணன், துணை மேயர் விக்னேஷ் பிரியா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## குடிநீர் குழாய் உடைப்பு : அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்



■ சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் வட்டம் இலந்தக்கரை நீரேற்று நிலையத்திலிருந்து காவிரி கூட்டு குடிநீர் திட்டம் மூலம் இலந்தக்கரை,வேளாரேந்தல், மாரந்தை,சேதாம்பல் ,ஏரிவயல்,மேலமருங்கூர்,சிலுக்கபட்டி , உசிலங்குளம் ஆகிய 8 ஊராட்சிகளுக்கு உட்பட்ட 71 கிராமங்களுக்கு காவிரி கூட்டுக்குடிநீர் முக்கிய ஆதாரமாக விளங்குகிறது. ஆனால் கடந்த 15நாட்களாக குடிதண்ணீர் விநியோகம் கிடைக்காததால் பொதுமக்கள் அவதி அடைந்துள்ளனர். மேலும் ஆங்காங்கே காவிரி கூட்டு குடிநீர் குழாய் உடைப்பு ஏற்பட்டுள்ளதால் தண்ணீர் வீணாக சாலையில் செல்கிறது இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.



■ விருதுநகர் மாவட்டம், சிவகாசி மாநகராட்சி சார்பில், சிவகாசி அறிவுசார் மையத்தில், ரூ.6 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள காமிக்ஸ் நூலகத்தினை பள்ளி குழந்தைகளின் பயன்பாட்டிற்குத் நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று திறந்து வைத்தார். இந்நிகழ்வில், விருதுநகர் மாவட்ட ஆட்சியர் வீ.ப. ஜெயசீலன் , சிவகாசி சார் ஆட்சியர் ப்ரியா ரவிச்சந்திரன் சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம், துணை மேயர் விக்னேஷ் பிரியா, சிவகாசி மாநகராட்சி ஆணையர் சரவணன், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



■ விருதுநகர் மாவட்டம் சிவகாசி கார்னேசன் சந்திப்பில், பட்டாசுத் தொழிலாளர்களின் உழைப்பை அங்கீகரிக்கும் விதமாகவும், அவர்களின் தியாகத்தை போற்றும் விதமாகவும், ரூ.29 இலட்சம் மதிப்பீட்டில் நினைவுச் சின்னத்தை நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மக்களுடன் இனைந்து 6/6/25 திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், விருதுநகர் மாவட்ட ஆட்சியர் வீ.ப. ஜெயசீலன், சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம், துணை மேயர் விக்னேஷ் பிரியா, சிவகாசி மாநகராட்சி ஆணையர் சரவணன் மற்றும் திமுக கட்சி நிர்வாகிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.



## ரயில்வே கேட்களை கடக்கும்போது செல்போன் பேசுவதை தவிர்க்க வேண்டும்: ரயில்வே அதிகாரிகள் அறிவுறுத்தல்

சென்னை: ஜூன்.8-

ரயில்வே கேட்டுகளை கடக்கும்போது, செல்போன் பேசுவதை தவிர்க்க வேண்டும் என, சர்வதேச லெவல் கிராஸிங் தினத்தை முன்னிட்டு, சென்னையில் பல்லாவரம் தாம்பரம் மார்க்கத்தில் ரயில்வே கேட் முன்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியில் ரயில்வே அதிகாரிகள் அறிவுறுத்தினர்.

ரயில் பாதை அருகே அமைக்கப்பட்டுள்ள ரயில்வே கேட்டை கடந்து செல்லும் போது, சிலர் பாதுகாப்பு விதிமுறை பின்பற்றுவதில்லை. இதனால், ரயில்களில் மோதி உயிரிழக்கின்றனர். எனவே, ரயில்வே பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்ற வலியுறுத்தி, ஆண்டுதோறும் ஜூன் முதல் வாரத்தில் சர்வதேச லெவல் கிராஸிங் வாரமாக கடைபிடிக்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

அந்த வகையில், சர்வதேச லெவல் கிராஸிங் விழிப்புணர்வு தின நிகழ்ச்சியை, சென்னை கோட்ட ரயில்வே மேலாளர் அலுவலகத்தில் கூடுதல் ரயில்வே மேலாளர் தேஜ் பிரதாப் சிங் கொடியசைத்து தொடங்கி வைத்தார். சென்னை ரயில்வே கோட்டத்தில் பல்லாவரம் தாம்பரம் மார்க்கத்தில் ரயில்வே கேட் எண் 26 முன்பு, ரயில்வே கோட்ட முதுநிலை பாதுகாப்பு அதிகாரி சத்தியசீலன் தலைமையில் விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்றது.

ரயில்வே கேட்களை பாதுகாப்பாக கடந்து செல்லக் கோரி வழிகாட்டி துண்டு பிரசுரங்களும் வழங்கப்பட்டன. ரயில்வே பாதுகாப்பு விதிகளை பார்த்து, கடந்து செல்லவும் அறிவுறுத்தப்பட்டது. மூடப்பட்ட ரயில்வே கேட்டை பொதுமக்கள் கடந்து செல்லக்கூடாது என்றும், ரயில் கேட் அருகே தண்டவாளத்தை கடந்து செல்லும் போது, செல்போனில் பேசவோ, ஹெட்போனில் பாட்டு கேட்டப் படியோ செல்லக் கூடாது என்று அறிவுறுத்தப்பட்டது.

## நெல் கொள்முதல் நிலையங்கள், கிடங்குகளில் கூடுதல் கட்டமைப்பு: அன்புமணி வலியுறுத்தல்

சென்னை: ஜூன்.8-

கொள்முதல் நிலையங்கள், கிடங்குகளில் 5 ஆண்டுகளில் ரூ.840 கோடி மதிப்புள்ள நெல் சேதமடைந்துள்ளதாக தமிழக அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது. எனவே, கொள்முதல் நிலையங்களிலும், கிடங்குகளிலும் பாதுகாப்பாக நெல் மூட்டைகளை சேமித்து வைப்பதற்கு வசதியாக கூடுதல் கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டில் நெல் கொள்முதல் நிலையங்கள், கிடங்குகள் ஆகியவற்றில் வைக்கப்பட்டிருந்த ரூ.840 கோடி மதிப்புள்ள நெல் மூட்டைகள் கடந்த ஐந்தாண்டுகளில் சேதமடைந்திருப்பதாக தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல்களில் தமிழக அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது.



நெல் மூட்டைகளை சேமித்து வைப்பதற்கான அடிப்படைக் கட்டமைப்புகளைக் கூட ஏற்படுத்தாமல் ஆண்டுக்கு சுமார் ரூ.200 கோடி அளவுக்கு மக்கள் வரிப்பணத்தை தமிழக அரசு வீணடிப்பது கண்டிக்கத்தக்கது.

தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் மூலம் தமிழக அரசின் பல்வேறு துறைகளில் இருந்து பெறப்பட்ட தகவல்கள் மூலம் 201920ஆம் ஆண்டில் தொடங்கி 202324ஆம் ஆண்டு வரையிலான 5 ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் தலா 1.25 லட்சம் டன் வரை நெல்/அரிசி மூட்டைகள் பயன்படுத்த முடியாத அளவுக்கு சேதமடைந்திருக்கின்றன என்று ஊடகச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

ஐந்தாண்டுகளில் இவ்வாறு சேதமடைந்த நெல்/அரிசியின் மதிப்பு மட்டும் ரூ. 840 கோடி. சேதத்தின் மதிப்பை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் முழுமையாக தெரிவிக்க வில்லை. முழுமையான பாதிப்பு தெரிய வந்தால் சேதத்தின் மதிப்பு இன்னும் அதிகமாக இருக்கலாம்.

நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளை அடுத்த சில நாள்களுக்கு சேமித்து வைக்க இட வசதி இல்லாதது, நெல் சேமிப்புக் கிடங்குகளில் கூரைகள் ஒழுகுவது, சுவர்களில் விரிசல் ஏற்பட்டிருப்பது, எலித் தொல்லைகள் கட்டுப்படுத்தப்படாதது போன்றவை தான் நெல் மூட்டைகள் சேதமடைவதற்கு காரணம் என்று வல்லுனர்கள் கூறியுள்ளனர்.

ஐந்தாண்டுகளில் ஏற்பட்ட சேதத்தின் மதிப்பு மட்டும் தான் இப்போது வெளியாகியுள்ளது. உண்மையில் பல பத்தாண்டுகளாக நெல் மூட்டைகள் சேதமடைவதும் , நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் மக்கள் வரிப்பணம் வீணாவதும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது.

போதிய கட்டமைப்பு வசதிகள் இல்லாததால் அரசுக்கு ஏற்படும் இழப்புகள் ஒருபுறம் இருக்க, நெல் கொள்முதல் நிலையங்களில் போதிய இடவசதி இல்லாததால் விவசாயிகள் கொண்டு வந்த நெல் மூட்டைகள் மழையில் நனைந்து வீணாவதும் ஆண்டுதோறும் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கிறது. கிடங்குகள் உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தத் தவறிய தமிழக ஆட்சியாளர்கள் தான் இந்த இழப்புகளுக்கு பொறுப்பேற்க வேண்டும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் 308 கிடங்குகள் மட்டுமே உள்ளன. அவை போதுமானவை அல்ல என்பதாலும், கொள்முதல் செய்யப்படும் வேளாண் விளைபொருட்களை பாதுகாப்பாக இருப்பு வைக்க வேண்டும் என்பதாலும், கிடங்குகளின் எண்ணிக்கையை 600ஆக உயர்த்த வேண்டும்.

நெல்கொள்முதல் நிலையங்களில் நெல் மூட்டைகள் வீணாவதைத் தடுக்க ஒவ்வொரு கொள்முதல் நிலையத்திலும் 1000 டன் நெல் மூட்டைகளை சேமித்து வைக்கும் அளவுக்கு கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஆனால், இத்தகைய ஆக்கப்பூர்வமான யோசனைகளை தமிழக அரசு கண்டுகொள்வதில்லை.

தமிழகத்தில் ஆண்டுக்கு சராசரியாக 30 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்படுவதாகவும், கிடங்குகளில் ஆண்டுக்கு சராசரியாக ரூ.200 கோடி இழப்பு ஏற்படுவதாகவும் வைத்துக் கொண்டால், இழப்பான தொகையைக் கொண்டு ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ.66 கூடுதல் ஊக்கத்தொகையாக வழங்க முடியும்.

ஆனால், விவசாயிகளுக்கு கூடுதல் விலை வழங்க மறுக்கும் தமிழக அரசு, அந்த தொகையை வீணடிக்கிறது. இதற்கு முடிவு கட்டும் வகையில் கொள்முதல் நிலையங்களிலும், கிடங்குகளிலும் பாதுகாப்பாக நெல் மூட்டைகளை சேமித்து வைப்பதற்கு வசதியாக கூடுதல் கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்"எனத் தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தின் பிரதிநிதித்துவம் குறையும் சூழல் வந்தால் எதிர்ப்பு தெரிவிக்கும் முதல் குரல் என்னுடையது : இபிஎஸ்



சென்னை: ஜூன்.8-

தமிழகத்தின் பிரதிநிதித்துவம் குறையும் சூழல் வந்தால், அதை எதிர்க்கும் முதல் குரல் என்னுடையதாகத்தான் இருக்கும் என்று அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வர் ஸ்டாலின் கடந்த ஜூன் 4ம் தேதி தனது எக்ஸ் வலைதளப் பக்கத்தில், "தொகுதி மறுவரையறை ஆபத்து குறித்து முன்பே நான் எச்சரித்திருந்தேன். அது இப்போது நிரூபணமாகிவிட்டது. பாஜகவுடன் கூட்டு சேர்ந்துள்ளதன் மூலம், பழனிசாமி இந்த சதித்திட்டம் பற்றிப் பேசாமல் அமைதி காப்பதுடன், துரோகத்துக்குத் துணைபோகிறவராகவும் இருக்கிறார். டெல்லி ஆதிக்கத்தின் முன் அவர் அடிபணிந்துவிட்டது இப்போது தெள்ளத் தெளிவாகியுள்ளது" என்று பதிவிட்டிருந்தார்.

இதற்கு பதில் அளித்து அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, தனது எக்ஸ் வலைதளப் பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது: தொகுதி மறுசீரமைப்பு எப்போது நடந்தாலும், அதில் தமிழகத்தின் உரிமைகள் பாதிக்கப்படக் கூடாது என்பதை மத்திய உள்துறை அமைச்சரை சந்தித்தபோதே தெரிவித்தது நான்.

என் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. தமிழகத்தின் பிரதிநிதித்துவம் குறையும் சூழல் வந்தால், அதை எதிர்க்கும் முதல் குரல் என்னுடையதாகத்தான் இருக்கும். கூட்டணி அறிவிக்கையின்போதே அடிமை சாசனம் எழுதிக் கொடுக்கும் கட்சிகள் திமுக கூட்டணியில்தான் இருக்கின்றனவே தவிர, இங்கு யாரும் அப்படி இல்லை.

இன்னும் வராத ஒன்றை `புலி வருது, புலி வருது' என்று பூச்சாண்டி காட்டும் வேலையைத்தான் ஸ்டாலின் தொடர்ந்து செய்கிறார். தன் ஆட்சியின் அவலங்களை இதைவைத்து மறைக்க நினைக்கும் ஸ்டாலினின் வழக்கமான அரசியலை தமிழக மக்கள் இனியும் நம்பப் போவதில்லை.

உண்மையில் தமிழக மக்கள் தொகுதி மறுவரையறை குறித்தோ, இந்தி திணிப்பு குறித்தோ தெளிவான மனநிலையில் இருக்கிறார்கள். ஆனால், தமிழகத்தில் நடக்கும் திமுக ஆட்சியில் மக்கள் அன்றாடம் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து, அவமானம் சுமந்து, வேலைவாய்ப்பு இல்லாமல், தங்கள் வீட்டுப் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல்தான் அவதிப்படுகிறார்கள்.

ஸ்டாலின் அவர்களே, மடைமாற்று அரசியலை நிறுத்திவிட்டு, முதலில் உங்கள் ஆட்சியில் நடக்கும் ரவுடியிசத்தையும், திருட்டுகளையும் நிவர்த்தி செய்வது எப்படி என்பது குறித்து பேசுங்கள். இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.



## "பாமக விவகாரத்தில் குருமூர்த்தியை வைத்து பாஜக சமரசம் செய்யவில்லை"

### நயினார் நாகேந்திரன் பேச்சு

மதுரை: ஜூன்.8–

"பாமக விவகாரத்தில் குருமூர்த்தியை வைத்து பாஜக சமரசம் செய்யவில்லை. அவரது முயற்சிக்கும், பாஜகவுக்கும் சம்பந்தம் இல்லை" என்று பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் கூறினார்.

மதுரை ஒத்தக்கடை வேலம்மாள் மைதானத்தில் ஜூன் 8ல் நடைபெறும் பாஜக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பங்கேற்கிறார். இந்த கூட்டத்துக்கான பந்தல்கால் நடும் விழா இன்று நடைபெற்றது. இதில், பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், பொதுச் செயலாளர் ராம.சீனிவாசன், பெருங்கோட்டப் பொறுப்பாளர் கதலி நரசிங்கப் பெருமாள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பின்னர், செய்தியாளர்களிடம் நயினார் நாகேந்திரன் கூறியது: "மதுரையில் நாளை மறுநாள் நடைபெறும் பாஜக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா நாளை இரவு மதுரை வருகிறார். இரவு மதுரையில் தங்கும் அவர் மறுநாள் காலை மீனாட்சியம்மன் கோயிலுக்குச் செல்கிறார். மாலையில் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்கிறார்.

எம்ஜிஆர் மதுரையில்தான் முதல் கூட்டம் நடத்தினார். மதுரையில் எந்த நிகழ்ச்சி நடத்தினாலும் வெற்றி பெறும். இது மீனாட்சி ஆட்சி செய்யும் இடம். தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சிக்கு வர வேண்டும். அதனால்தான் மதுரையில் கூட்டம் நடத்தப்படுகிறது. பாஜக ஆலோசனைக் கூட்டத்தில் கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்கவில்லை. பாஜக கூட்டணியில் ஓபிஎஸ் இருக்கிறார். பாமகவும் வரும். தேமுதிக வருகையை பொறுத்திருந்து பார்ப்போம். தமிழகத்தில் திமுக அரசுக்கு எதிராக அனைவரும் ஓரணியில் சேர வேண்டும் என்பதுதான் பாஜகவின் விருப்பம்.

பாமக விவகாரத்தில் குருமூர்த்தியை வைத்து பாஜக சமரசம் செய்யவில்லை. அவரது முயற்சிக்கும், பாஜகவுக்கும் சம்பந்தம் இல்லை. குருமூர்த்தி நாட்டில் நல்ல விஷயங்கள் நடைபெற வேண்டும் என்று விரும்புகிறார். அவர் மக்கள் நலனை விரும்புபவர்.

மதுரையில் முருக பக்தர்கள் மாநாட்டை நடத்தவிடாமல் தடுக்க பல்வேறு இடையூறுகளை செய்கின்றனர். மாநாட்டுக்கு அனுமதி மறுத்தால் உயர் நீதிமன்றத்தை நாடுவோம். டாஸ்மாக் நிறுவனத்தில் சோதனை நடத்த மத்திய அரசுக்கு அதிகாரம் உள்ளது. அந்த சோதனையில் பங்கேற்ற அமலாக்கத் துறை அதிகாரிகள் இடமாறுதல் செய்யப்பட்டது, வழக்கமான நடைமுறைதான்" என்று அவர் கூறினார்.





## திண்டுக்கல்லில் மதுவிலக்கு காவல்துறையினர் திடீர் சோதனை

திண்டுக்கல், ஜூன்.8

திண்டுக்கல் மதுவிலக்கு அமலாக்க பிரிவு டிஎஸ்பி.முருகன் தலைமையில் சார்பு ஆய்வாளர் மலைச்சாமி, காவலர்கள் மற்றும்

மத்திய நுண்ணறிவு பிரிவு போலீசார் சீனிவாசன் உள்ளிட்ட போலீசார் இணைந்து

திண்டுக்கல்லில் உள்ள சர்ஜிகல் கடைகள் மற்றும் சயின்டிபிக் சப்ளையர்ஸ் கடைகளில் உரிமம் இல்லாமல் எத்தனால் மற்றும் மெத்தனால் வேதிப்பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறதா என திடீர் சோதனை நடத்தினர்.

மேலும் திண்டுக்கல் மதுவிலக்கு போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். எத்தனால் மற்றும் மெத்தனால் ஆகியவற்றை எந்தவித உரிமம் இன்றி கள்ளத்தனமாக வைத்திருந்தாலோ அல்லது விற்பனை செய்தாலோ கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மதுவிலக்கு போலீசார் எச்சரிக்கை செய்தனர்



■ ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ராஜ கோபால் சுன்கரா இஆப., அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உலக சுற்றுச்சூழல் தினம் 2025 முன்னிட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் தூய்மை இயக்கத்தின் கீழ் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் அனைத்து அரசு துறை அலுவலகங்களில் கழிவு பொருட்கள் சேகரிக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திரு.அர்பித் ஜெயின் இ.ஆ.ப., உட்பட பலர் உள்ளனர்.




■ கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் புத்தேரி ஊராட்சிக்குட்பட்ட, புத்தேரி அரசு தொடக்கப்பள்ளியில் மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்படும் முதலமைச்சரின் காலை உணவின் தரம் குறித்து கேட்டறிந்தார்கள்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161